**ஐ.டி.எண். 33/2024** **06.03.2026**

**தொ.த.சாட்சி 1 திரு. நவீன்குமார் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

20.04.2023 அன்று விஷ்ணுபிரியா என் மீது புகார் அளித்தார் என்றால் சரிதான். அதற்கு அன்றைய தினமே நிறுவனம் எனக்கு தகவல் தெரிவித்தது என்றால் சரிதான். அன்றைய தினமே நான் அந்த புகாரை மறுத்து எழுத்து பூர்வமாக என் விளக்கத்தை சமர்ப்பித்தேன் என்றால் சரிதான். 28.04.2023 அன்று உள்துறை விசாரணை குழு அமைக்கப்பட்டு விசாரணை நடைபெற்றது என்றால் சரிதான். அந்த விசாரணையானது 28.04.2023, 03.05.2023, 08.05.2023 மற்றும் 09.05.2023 ஆகிய நான்கு தேதிகளில் நடைபெற்றது என்றால் சரிதான். விசாரணையின்பொழுது மொத்தம் 5 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர் என்றால் சரியல்ல 4 சாட்சிகள் விசாரிக்கப்பட்டனர். விசாரணை குழுவின் அறிக்கையின் அடிப்படையில் தான் நிர்வாகம் என்னை பணிநீக்கம் செய்தது என்றால் சரிதான். 31.07.2023 அன்று என்னை பணிநீக்கம் செய்துவிட்டதாக நிர்வாகத்தினர் எனக்கு தெரிவித்தனர் என்றால் சரிதான். அதன்பின்பு நான் நிர்வாகத்திற்கு சென்று வேலை அளிக்கும்படி அவர்களிடம் கேட்டேன். என்னுடைய பணிநீக்க உத்தரவானது தபால் மூலம் தான் சார்வு செய்யப்பட்டது என்று நிர்வாகம் தன்னுடைய பதிலுரையில் கூறியிருந்ததை நான் தெரிந்து கொண்டேன். நான் பணிநீக்க உத்தரவை நேரடியாக பெறுவதற்கு மறுத்த காரணத்தினால் தான் நிர்வாகம் தபால் மூலமாக எனக்கு அனுப்பியது என்றால் சரியல்ல. பணிநீக்கம் செய்த பின்னர் நான் தொழிலாளர் உதவி ஆணையர் முன்பு மனு தாக்கல் செய்தேன் எந்த தேதியில் தாக்கல் செய்தேன் என்று எனக்கு நினைவில் இல்லை. தொழிலாளர் ஆணையர் முன்பு நிர்வாகம் சார்பாக ஆஜராகி பதிலுரையும் தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். பதிலுரை தாக்கல் செய்யப்பட்ட பின்பு சமரசம் ஆகாததால்தான் நான் நீதிமன்றத்தை அனுகினேன் என்றால் சரிதான். என்னுடைய புகார் மற்றும் நிருபண வாக்குமூலத்தில் 45 நாட்களுக்குள் சமரச அதிகாரி சமரச முறிவு அறிக்கை தாக்கல் செய்யாததால் நான் இந்நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்ததாக கூறியுள்ளேன் என்றால் சரிதான். நிர்வாகம் விஷ்ணுபிரியா அளித்த புகார் மீது முறைப்படி நடவடிக்கை எடுத்து அதன்பின்பு தான் என்னை பணிநீக்கம்

செய்தது அதனால் நான் தாக்கல் செய்த இந்த வழக்கானது நிலைக்கதக்கதல்ல என்றால் சரியல்ல. மேலும் நிர்வாகத்திற்கு அவபெயர் ஏற்படுத்தும் நோக்குடன் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனவே இந்த வழக்கு நிலைக்கதக்கதல்ல மற்றும் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

S UMAMAHESWARI

Digitally signed by S UMAMAHESWARI
Date: 2026.03.07 13:13:07 +0530